# இந்தியாவிற்கு இனிமேலும் தொழிற்சாலைகள் தேவைதானா? ...கிருஷ்ணதாசன்

EIA2020 இன்று வெகுவாக அங்குமிங்கும் பேசப்படுகிறது. சில ஆதரவுக் குரல்கள் பல எதிர்ப்புக் குரல்கள்.

முதலில் புரிந்து கொள்ளுங்கள் அறிவியல் வளர்ச்சியை நாம் அதிகமாக உபயோகிக்க, உபயோகிக்க வேலை வாய்ப்பின்மை அதிகரிக்கும். காற்று மாசு அதிகரிக்கும். தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும். ஏற்கனவே காற்றுமாசால் திணறிக் கொண்டிருக்கிறோம். தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறோம். இனிமேலும் தொழிற்சாலைகள் தேவைதானா?

முதலில் அறிவியல் வளர்ச்சி அதிகரிப்பதால் எப்படி வேலை வாய்ப்பு குறைகிறது என்பதைக் காண்போம். ஒரு விசைப்படகு உபயோகிப்பதால் சுமார் நூற்றுக் கணக்கான கட்டுமரத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. விசைப் படகு உரிமையாளருக்கு அதிகப் பணம் போய்ச் சேர்கிறது.

ஒரு துணி நெய்யும் தொழிற்சாலையால் ஆயிரக்கணக்கான கைத்தறி நேசவாள குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அவர்களில் பலர் வேலை தேடி நகரத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

விவசாயத்திற்கு இயந்திரங்களை உபயோகிப்பதால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், பல்லாயிரக் கணக்கான மாடுகள், அந்த மாடுகளை மேய்ப்பவர்கள், வளர்ப்பவர்கள் ஆகியோரின் வாழ்வாதாரம் சிதைகிறது. எந்திர முதலாளிகளுக்கு மட்டும் அதிக பணம் கிடைக்கிறது. ஆக அறிவியல் வளர்ச்சியால் பணம் பெரும்பாலும் சில இடங்களிலே சேர்கிறது. ஏழைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

சில நாடுகளில் மக்கள் தொகை குறைவு. நிலப்பரப்பும், நீர்வளமும் அதிகம். அவர்கள் இயந்திரங்களை உபயோகிக்கலாம். ஆனால் நமக்கோ மக்கள் தொகை அதிகம். நிலப்பரப்போ குறைவு. ஆதலால் நாம் மனித உழைப்புக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

ஆற்றங்கரையிலோ, ஏரிக்கரையிலோ தொழிற்சாலை ஆரம்பித்தால் லட்சக்கணக்கான கன அடி நீர் உறிஞ்சப்படுகிறது, மாசுபடுகிறது. இது பல்லாயிரக்கணக்கான விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கிறது. காற்றும் தண்ணீரும் மாசடைவதால் உடல் நலமும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. சரி, ஆற்றங்கரை, ஏரிக்கரை வேண்டாம் . கொஞ்சம் தொலைவில் அமைப்போம் என்றாலோ மிக ஆழமாக நீருக்குத் துளையிடுவதால் அங்கு அழுத்தம் மிகக் குறைந்து நீர் அதிகம் இருக்கும் ஆற்றங்கரையிலிருந்தோ, ஏரியிலிருந்தோ அங்கு செல்கிறது. விவசாயம் சார்ந்த தொழில்களும், அதனை நம்பி வாழும் குடும்பங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

கடற்கரையில் தொழிற்சாலை ஆரம்பித்தாலோ கடலில் மீன்வளம் பாதிக்கப்பட்டு மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையில் சுமார் 3000 பேருக்கு வேலை கிடைக்கிறது என்று எடுத்துக் கொண்டால் அதனை விட சுமார் 10 மடங்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறதே. இது தேவைதானா. அத்துடன் தண்ணீர் தட்டுப்பாடு, காற்று மாசு வேறு. ஆதலால் நம்மைப் போன்ற மக்கள் நெருக்கமுள்ள நாடுகளுக்கு பெருந்தொழிற்சாலைகள் (அதாவது காற்றையும், நீரையும் கெடுக்கின்ற தொழிற்சாலைகள்) கண்டிப்பாக தேவையில்லை.

ஒரு மனிதனின் அத்தியாவசியத் தேவை உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம் போன்றவை. சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால் காற்றும், நீரும் மிகவும் முக்கியம்.

சீனாவின் மக்கள் தொகை கிட்டத்தட்ட இந்தியாவை விட கொஞ்சம் தான் அதிகம். ஆனால் நிலப்பரப்போ இந்தியாவைவிட மூன்று மடங்கு. அங்கு தொழிற்சாலைகளால் பலர் பாதிக்கப்பட்டு கனடாவிலிருந்து காற்றை செல்வந்தர்கள் இறக்குமதி செய்ததை செய்தித்தாள்களிலும் ஊடகங்களிலும் நாம் பார்த்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம். (இன்று டெல்லியின் நிலையும் அப்படித்தானே!) மூன்று மடங்கு பெரிதான மிக அதிக நீர்வளம் கொண்ட சீனாவிற்கே இந்த நிலை என்றால் அங்கிருந்து பல தொழிற்சாலைகள் இந்தியாவிற்கு கொண்டு வந்தால் மக்கள் நிலை என்னாவது.

சில நாடுகளின் பரப்பளவையும் மக்கள் தொகையையும் தோராயமாக ஒப்பிட்டுள்ளேன். அதை கவனியுங்கள்.

| நாடு | மக்கள் தொகை (கோடியில்) | பரப்பளவு | ஒரு சதுர கிலோ மீட்டரில் மக்கள்தொகை |
|---|---|---|---|
| இந்தியா | 138.0004 | 32,87,263 | 419.803 |
| சீனா | 143.9323 | 95,97,000 | 149.976 |
| அமெரிக்கா | 33.1145 | 98,34,000 | 33.673 |
| ரஷ்யா | 14.5934 | 1,71,00,000 | 8.534 |
| பிரேசில் | 21.2559 | 85,16,000 | 24.960 |
| ஆஸ்திரேலியா | 2.5499 | 76,92,000 | 3.315 |
| பாகிஸ்தான் | 22.0892 | 8,81,913 | 250.469 |
| இலங்கை | 2.1421 | 65,610 | 326.499 |
| வங்காள தேசம் | 16.4689 | 1,47,570 | 1116.008 |

ஆதலால் இந்தியா மற்றும் இந்தியாவைப் போன்ற மக்கள் நெருக்கமுள்ள நாடுகள் உதாரணமாக, இந்தியா, இலங்கை, வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும், பெருந் தொழிற்சாலைகள் தீங்காகவே அமையும். ஆதலால் அதை விடுத்து இந்த நாடுகள் விவசாயம், காடு வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, நெசவு என்று தொழில்களை மேம்படுத்தினால் நல்ல காற்றும் கிடைக்கும், தண்ணீரும் கிடைக்கும். மிகவும் அத்தியாவசியத் தேவையெனில் மட்டுமே காற்று மாசை அதிகப்படுத்தாமலும் நீர்வளத்தைச் சுரண்டாமலும் உள்ள தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம்.

உண்மையிலேயே பெருந் தொழிற்சாலைகள் நம் நாட்டிற்கு வருவது மக்களுக்கு நட்டம். ஆட்சியாளர்கள், அதிகாரிகள், பெருந்தொழிலதிபர்கள், மருத்துவமனை முதலாளிகள் போன்றவர்களுக்கு மட்டும் லாபமீட்டும் தொழிலாகும்.

இதற்கு மாறாக பெருந்தொழிற்சாலைகளை நீர்வளமும், அதிக நிலப்பரப்பும், குறைந்த மக்கள் தொகையும் உள்ள நாடுகளில் ஆரம்பிக்கலாமே! அதிக மக்கள் தொகை உள்ள நாட்டிலிருந்து தொழிலாளர்களை அழைத்துச் செல்லலாமே! நம் நாட்டின் மக்கள் தொகையும் குறையும். ஆனால் இது தொழிலதிபர்களின் இலாபத்தைக் குறைத்து விடும் என்ற பேராசைதானே காரணம்.

கட்சித் தொண்டர்களே! உங்கள் கட்சித் தலைமை என்ன செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கும் பழக்கத்தைக் கைவிடுங்கள். நீரும், நிலமும், காற்று முழுவதும் மாசடைந்து விட்டால் அவர்கள் நீர் வளமும் நிலவளமும் மிகுந்த, காற்று மாசு குறைந்த நாட்டிற்கு பறந்து சென்று செட்டிலாகிவிடுவார்கள். அல்லது ராக்கெட்டுகளில் பறந்து சென்று உயிர் வாழத் தகுதியுடைய ஏதாவது கிரகங்களுக்கு சென்றுவிடலாம். ஆனால் உங்களின் நிலை, உங்கள் குழந்தைகளின் நிலை என்ன?எண்ணிப் பாருங்கள். நீங்கள் கண்டிப்பாக இங்குதானே இருக்க வேண்டும். நீங்கள் சம்பாதிக்கும்பணத்தில் பெரும் பகுதியை மருத்துவமனைக்கு கொடுக்க வேண்டியிருக்கும். ஆதலால் மக்களே சிந்தித்துச் செயல்படுவீர்.

அறிவியல் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க நிலம், நீர், காற்று, ஆகாயம் எல்லாம் முழுவதுமாக மாசுபட்டு பூமி மனிதகுலம் வசிக்க தகுதியற்றதாக மாறிவிடும். கடல் நீர்மட்டம் உயர்ந்து கொண்டே வருகிறதே. வசிக்கும் வீட்டில் தீ வைத்துவிட்டு வேறு வீடு தேடி அலைபவர்களை நாம் புத்திசாலிகள் என்பதா? அல்லது முட்டாள்களென்பதா? அதே போல் பூமியை அறிவியல் வளர்ச்சியால் அழித்துவிட்டு உயிர் வாழ வேறு கிரகங்கள் கிடைக்குமா என்று தேடி அலையும் விஞ்ஞானிகளையும் ஆட்சியாளர்களையும் எப்படி அழைப்பது? ஆதலால் விஞ்ஞானிகளே! உங்கள் ஆராய்ச்சியை மூட்டைகட்டி வைத்துவிட்டு மனிதகுலம் நிம்மதியாக வாழ என்ன செய்வது? பூமியைக் காப்பாற்ற என்ன செய்வது என்று யோசியுங்கள். ஏனென்றால் பூமி இருந்தால்தான் மனிதகுலம் வாழ முடியும். ஆதலால் பூமியை காப்பாற்றுவது தான் மிகவும் முக்கியம்.

மேலும் பூமி மனிதனுக்காக மட்டும்தானா? மனிதனின் உடல் சுகத்துக்காக மட்டும்தானா? மற்ற உயிரினங்களின் நிலை என்ன? எல்லா உயிரினங்களையும் அழித்துவிட்டு நாம் மட்டும் எப்படி நிம்மதியாக வாழமுடியும். ஆட்சியாளர்களே! விஞ்ஞானிகளே! இதைப் பற்றியும் கொஞ்சம் சிந்தியுங்கள்! நன்றி. வணக்கம். அடுத்த பதிவில் சந்திப்போம்.